**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:15.09.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வீரிய ஒட்டு ரகங்களை வணிகமயமாக்குவதற்கான வயல் நாள்**

வீரிய ஒட்டு ரகங்களை வணிகமயமாக்குவதற்காக, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 14.09.2022 அன்று வயல் நாள் நடத்தப்பட்டது. தனியார் விதை நிறுவனங்களைச் சேர்ந்த ஐம்பது நிர்வாகிகள், விதைச் சான்றளிப்புத்துறை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 56 விஞ்ஞானிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கத்தின் இயக்குநர் முனைவர். இ. சோமசுந்தரம் வரவேற்புறையாற்றினார். அவர் தனது உரையில், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் கடந்த 15 ஆண்டுகளாக தனியார் விதை நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வீரிய ஒட்டு ரகங்களை வணிகமயமாக்குவதை ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது எனக் கூறினார்.

வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். அவரது உரையில், கடந்த 20-30 ஆண்டுகளில் விவசாயத்தில் ஏற்பட்ட மகத்தான வளர்ச்சி பற்றி எடுத்துரைத்தார். பயிர் உற்பத்தியை மேம்படுத்தவும். அதிகரித்து வரும் உணவுத் தேவையை சமாளிக்கவும் விவசாயத்தில் விதைகளின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். பல்வேறு வேளாண் கால நிலைகள் மற்றும் தீவிர பயிர் முறைகள் மற்றும் வேளாண் சந்தை விநியோக தேவையை பூர்த்தி செய்ய பொருத்தமான பண்புகளுடைய தரமான இரகங்களின் விதைகளை உற்பத்தி செய்து விநியோகிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார். தொழில்நுட்பம் மற்றும் வேளாண் விநியோக சங்கிலியை மேம்படுத்துவதுடன் உழவர்களின் நலனுக்காக தனியார் விதை நிறுவனங்களுடன் கைகோர்த்து செயல்படுவதின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குநர் முனைவர். ஆர். ரவிகேசவன் மற்றும் தோட்டக்கலை கல்லூரி முதன்மையர் முனைவர் பி. ஐரீன் வேதமோனி ஆகியோர் வணிகமாயக்கலுக்கு உகந்த பல்வேறு பயிர்களில் உள்ள வீரிய ஒட்டு மற்றும் பிற ரகங்கள் பற்றிய தொழில்நுட்ப விளக்கங்களை வழங்கினர். மேலும் தக்க சமயத்தில் தேவையான அளவு விதைகளை வழங்க ஏதுவாக விதை உற்பத்தி நிறுவனங்கள், தங்களுக்கு தேவையான வல்லுநர் விதைகளை முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டனர்

விதைமைய இயக்குநர் முனைவர். ஆர். உமாராணி அவர்கள் பல்கலைக்கழகத்தில் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்கள், குறிப்பாக விதை மூலாம் பூசிதளின் நன்மைகள் மற்றும் பல்வேறு பயிர் இனங்களை அடையாளம் காணும் வழிமுறைகள் குறித்துத் தெரிவித்தார். வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் முனைவர். சுரேஷ் குமார் அவர்கள் பல்கலைகழக வீரிய ஒட்டு ரகங்களை வணிகமாயக்குவதில் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குனரகம் எடுத்துள்ள முயற்சிகளை பாராட்டியதுடன், தக்க தருணத்தில் விதைகள் மற்றும் ஏனைய இடுபொருட்கள் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வதின் அவசியத்தை வலியுறுத்தினார். கோவை விதை ஆய்வு துணை இயக்நர் திரு. எஸ். வெங்கடாசலம் வாழ்த்துரையில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைய தரமான மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்து விநியோகிக்க வலியுறுத்தினார்.

கலந்துரையாடலின் போது, தனியார் விதை நிறுவனங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பின் பிரதிநிதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வீரிய ஒட்டு மற்றும் ரகங்களின் விளைச்சல் திறன் தொடர்பான கேள்விகளை எழுப்பினர். தரமான விதைகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை மேம்படுத்த அவர்கள் தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அதற்கு பல்கலைக்கழக பயிர் வல்லுநர்கள் தகுந்த பதிலுரை தந்து தெளிவுபடுத்தினர்.

முனைவர் எஸ். சுந்தரேஸ்வரன், பேராசிரியர் (விதை நுட்ப அறிவியல்) அவர்கள் வணிகமயாக்கலுக்கான விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறைகள் பற்றி குறிப்பிட்டு நன்றியுரை வழங்கினார்.

மேலும் பல்கலைகழக வளாகத்தில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பல்வேறு வீரிய ஒட்டுகள் மற்றும் பயிர் ரகங்களின் சிறப்பு அம்சங்கள் மற்றும் பண்புகள் நேரடி மாதிரிகளுடன் காட்சிப்படுத்தப்பட்டது. பங்கேற்பாளர்கள் வயல்வெளியில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, சூரியகாந்தி, பருத்தி மற்றும் தீவனங்களை நேரடியாக கண்டு விளக்கங்களைப் பெற்று பயன் அடைந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**